ஓம்
சக்தி துணை



# ஊர்காவற்றுறை, வட நாரந்தனையில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் தான்றோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் பேரில் பதிகமும் பக்திப் பாடல்களும்


அச்சிட்டவர்:
நாரந்தனையூர் வே. சிவகுரு அவர்கள்


குறிப்பு:- இச்சிறு நூலால் சேகரிக்கப் படும் பணம் அம்பாளின் ஆலயத்திருப்பணிக்கே யாகும். ஆதலினால் அம்பாளின் அடியார்கள் யாபேரும் மனமுவந்து ஒவ்வொரு பிரதி வாங்கி அம்பாளின் அனுக்கிரகத்தைப்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாரந்தனை வடக்கு
22-8-59

சைவ மகா சபையார்


1959

ஓம்

சக்தி துணை



*உத்தர*

ஊர்காவற்றுறை, அட நாரந்தனையில்

கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும்

# தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அப்பாள்

*ம்*

பேரில்

# பதிகமும் பக்திப் பாடல்களும்

*Author காவலூர்க் கவிஞன் ஜி.எம். செல்வராஜ்*

அச்சிட்டவர் :

நாரந்தனையூர் வே. சிவகுரு அவர்கள்

குறிப்பு - இச்சிறு நூலால் சேகரிக்கப் படும் பணம் அம்பாளின் ஆலயத்திருப்பணிக்கே யாகும். ஆதலினால் அம்பாளின் அடியார்கள் யாபேரும் மனமுவந்து ஒவ்வொரு பிரதி வாங்கி அம்பாளின் அனுக்கிரகத்தைப்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாரந்தனை வடக்கு 22-8-59 — சைவ மகா சபையார்

1959

முதலாம் பதிப்பு: 1959.

இப்புத்தகம் தேவையானோர் தான்
தோன்றி மனோன்மணி அம்மன்
ஆலய சைவ மகா சபையாரிடம்
பெற்றுக் கொள்ளலாம்.

நாரந்தனை வடக்கு
ஊர்காவற்றுறை.

உ

சக்தி துணை

"தையல் நல்லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கு மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்தப் பணிமின் பணிந்தபின்
வையப் பவமினி மேவகிலாவே"

- திரு மந்திரம்.

ஸ்ரீ விராட்புருடனது இடை நாடிஸ்தான மென்றும், சிவபூமி, சொர்ணபூமி யென்றும் உபநிடத புராணங்களில் விதந்து கூறப்படும் ஈழமணித்திரு நாட்டின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தது நாரந்தனைக் கிராமம். இக்கிராமத்தின் வடபாகத்திலே அரசினர்க்குரிய வளவு இருக்கின்றது. இந்த [illegible] வடக்கே அலைகடல் "ஓம், ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தை உச்சரிப்பது போல, அலைமோதி விழுகிறது. வாடையும், சோழமும், கச்சானும், கொண்டலும் சீறியெழுந்து மோதும் பயங்கர நிலையும், தென்றல் வீசி அவ்விடம் வந்தாரைத் தழுவிச் செல்லும் இன்ப நிலையும இந்த இடத்திலே உண்டு. இந்தச் சூழ் நிலையிலே தான், "கோயில் இல்லா ஊரில் குடியிருக்கும்" குறை தீரவும், இக்கிராம மக்களுக்குக் கல்வி, செல்வம், ஞானம் ஆகியன பெருகவும், 1951-ம் ஆண்டு பங்குனி மாதம் அன்னை தான்தோன்றியாகப் பிரகாசித்தாள். [illegible] நற்றவம் புரிந்தவர் இருவர் ஜீவனோபாயத்திற்காக [illegible] கல்லுப் புரட்டுங்கால் காட்சியளித்தாள். புதைபொருளான அன்னையின் விக்கிரகம் அரசினரிடம் ஒப்படைக்கப்பட்டாலும், அருட்சோதி இருந்த இடத்திலே அருள் இருந்தது. அந்த அருள் சிறுவர்களைத் தன்பால் அழைத்தது. சின்னஞ்சிறு குடிசையமைத்து, ஒளி ஏற்றி, கர்ப்பூர ஆராதனை செய்தனர். அருள் வளர்ந்தது. அன்னையின் உருவைத் திரைச் சீலையில் வரைந்து வழிபட்டனர். இதே ஆண்டில் இக்கிராம வாசி ஒருவரது கனவிலே அன்னை தோன்றி "நாளை கடலிலே நீ என்னைக் காண்பாய்" என்றாள். மறுநாள் அதிகாலை அலை

மோதி நுரை எழும்பும், கற்பாறைகளில் ஒன்றாக நாகபாம்பு உருக்கொண்ட கல்லும் இருக்கக் கண்டார் அந்த மனிதர். பின்னால் அதுவும் வழிபாட்டிற்குரியதாயிற்று. 53-ம் ஆண்டளவில் வீசிய புயல்காற்றினால் கொட்டில் வீழ்ந்ததன் காரணமாக அந்த நாகக்கல்லு சற்றே சிதைவுண்டது.

இற்க, மேற்படி இடத்திலே கோவில் எழுப்ப எண்ணிய மக்கள் 1951-ம் ஆண்டு வைகாசி மாதம் 20-ந் திகதி சைவ மகாசபையைக் கூட்டினர். இச்சபையின் திறமை மிக்க, அயரா உழைப்பாளிகளான நிருவாகிகளால் அரசினிடமிருந்து நிலம் பெறப்பட்டது. பொது மக்களின் ஆர்வம் மிக்க உதவியால் ஆலயம் எழுந்தது. 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் நாரந்தனைக் கிராமத்தை ஒரு கலக்குக் கலக்கிய அம்மை நோய் பரவியிருந்த இக்கட்டான சூழ்நிலையிலே - பலதரப்பட்ட எதிர்ப்புக்களுக்கிடையிலே கும்பாபிஷேகம் நடைபெற்றது, அன்னையின் புனித சந்நிதானத்திலே வேதியர்கள் ஓதிய வேதமும், பக்தர்கள் எழுப்பிய அரோகரா ஒலியும், தேவாரப் பண்ணும், மணியோசையும் இக்கிராமத்தைப் பிடித்த பெரும்பிணி நீங்க வழியாயிற்று. சுகாதாரப் பகுதியைச் சார்ந்த உயர்தர அதிகாரிகள் முதல் ஏனைய அனைவரும் வியப்புற்றனர். "அம்பிகையின் அருட்சக்தியே சக்தி அவளது கருணையால் தினமும் நோயின் உத்வேகம் குறைகின்றது' என்று கூறிக்கொண்டிருக்கினார்கள். அம்பிகையின் அபிஷேகங்கள் முடிவடைவதற்கும் - சுகாதார அதிகாரிகள் தம் கடமை முடிந்து தந்தம் பகுதிகளுக்குச் செல்வதற்கும் சரியாக இருந்தது. தமது செலவிலேயே ஒரு அபிடேகம் செய்வித்து விடைபெற்றனர் அதிகாரிகள்.

இந்தக் கிராமத்திலே காணப்படும் செட்டியார் தோட்டம், செட்டியார் ஒழுங்கை, பண்டாரப் புலம் என்னும் பெயர்களும் - இந்தப் புதை பொருள்களும் சரித்திர காலத்தைக் கணக்கிட வாய்ப்பாகிவிட்டன. இராஜராசன் காலத்தைச் சேர்ந்ததாக இப்புதை பொருள் காணப்படுவதாகக் கூறுகின்றனர். வியாபாரிகள், சமயப்பற்றுள்ள தொண்டர்கள் வாழ்ந்தார்கள் என்பதும் - அவர்கள் வழிபட்ட அன்னையே இப் புதைபொருள்

விக்கிரகம் என்பதற்கும் மேலே குறிப்பிட்ட பெயர்களும், அன்னை விக்கிரகத்துடன் கண்டெடுக்கப்பட்ட மற்றும் நாணயங் களும் சான்று பகருகின்றன.

மெய்யுருகி வேண்டுவார்க்கெல்லாம் அவரவர் தவப்பயன் நோக்கி அன்னை அருள்பாலிக்கிறாள். தினமும் பொங்கலும் பூசையும் நடக்கிறது. மணிஓசை கேட்கிறது. கேட்டதும் மக்கள் "தாயே" என்று சொல்லுகிறார்கள். அவள் நாமம் தினமும் ஓதுவதால் புனிதமடைகிறார்கள். அம்பிகையின் புனித பாதங்கள் போற்றி! போற்றி!

Describe

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

(1) நாக வழிபாடு as in Nainativu
(2) Placed Ammon lately in Nainativu
(3) [illegible]
(4) [illegible]
(5) [illegible]
(6) [illegible]
(7) [illegible]
(8) [illegible]
(9) Consult Mr Selvaratnam Jaffna Museum
(10) Coins — which period — Dutch Coins, Chola Coins

## விநாயகர் துதி

### கட்டளைக கலிததுறை

திருவரு நாரந் தனைப்பதி மேவிய தேவியவள்
மருவரு மைம்பால் தனையுடைத் தாயென் மனோன்மணிக்கு
வருமொரு சீர்ப்பதி கந்தனைப் பாட வரமுதவு
மொருதிரு கொம்புடை வேழ முகத்தவ னோர்துணையே

## சிவபெருமான் துதி

### கலி விருததம்

முத்த மிழ்க்கலை முற்று முணர்ந்திடாத்
தத்தை யின்குணங் கொண்ட தனையநான்
சத்தி யினபதி கந்தனைச் சாற்றிட
கைத்த லத்தருள் காட்டுகங் காதரா.

## மனோன்மணி துதி

நாரந் தனையடி தாங்கு மரனிட நங்கையேயென்
நாரந் தனையிடர் தாங்கி யவரிடம் நண்ணவரு
நாரந் தனையிட மாக்கு மனோன்மணி நற்பதிகம்
நாரந் தனையுல கேற்றிடச் செய்கநீ நற்றுணையே.

## சரஸ்வதி வணக்கம்

மண்பொதுத் தந்தை மருவிடுந் தேவி மலர்க்கமல
வெண்பணி யாடை யணிந்திடும் மேனிகொள் வித்தகிநீ
தண்புகழ் நாரந் தனைக்கண் மனோன்மணித் தாயவள்பால்
எண்புகழ் சீர்ப்பதி கந்தனைப் பாட இசைந்தருளே.

## அவையடக்கம்

### கட்டளைக் கலித்துறை

அலையாழி தன்னை அகப்பைகொண் டள்ளி அதைக்குறைக்க
விலையாக நிற்கு மறிவாழி போல நினைத்தவைமுன்
தலையாக வந்து பதிகமென் றீதனைத் தந்ததினாற்
கலையார்வம் மிக்கறி வாளர் குறையைக் களைகுவரே.

## மனோன்மணி பதிகம்

1. சீர்மருவு சென்னிமிசை நவரத்ன மகுடமொடு
சீவிப் பொலிந்த முடியும்
செந்திலக நுதலோடு வெண்ணீறுங் கருணைபல
சிந்திடுந் திருவிழிகளும
பார்மருவு திருவமுத மூறுபுன் னகைவாயும்
பவளம் பழித்த இதழும்
பக்தர்க் கெலாந்திருப் பாலூட்டு கொங்கையும்
பாக்கியம் நிறைந்த கரமும்
நேர்மருவு மழகொழுகு மேனியும் விண்ணோர்கள்
நின்றிறைஞ் சிடுபாதமும்
நிறைவாக வேகொண்டு இதுவேளை யடியர்முன்
நின்கருணை யோடு வருவாய்
ஏர்மருவி லங்குநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம னோன்மணி யம்மையே.

2. விண்ணவர்க் கரசியே தென்னகர்க் கரசியே
வேதவே தியர்க் கரசியே
வித்தகர்க் கரசியே விற்பனர்க் கரசியே
வெள்ளி யங்கிரி யரசியே
மண்ணவர்க் கரசியே மண்டலத் தரசியே
மந்தி ரங்கட் கரசியே
மறைநான்கி னுக்குமொரு மாசிலா வரசியே
மாத வத்தோ ரரசியே
புண்ணியத் தரசியே பூரணத் தரசியே
பொன்னம் பலத் தரசியே
புத்திரர்க் குன்னருளை இத்தினங் காட்டிடப்
பொற்றேரி லேறி வருவாய்
எண்ணுதர்க் குரியநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம னோன்மணி யம்மையே.

3. சித்திர மழுத்துநவ ரத்தின முகத்தியே
செஞ்சுட ரெழுஞ் சோதியே
செப்புசஞ் சீவியே ஒப்பிலா தாவியே
செகதலச் சிதே வியே
உத்தம மிகுந்தபரி சுத்தியேவ ரத்தியே
ருத்திரன் சிமாட் டியே
உம்பர்தொழு வாணியே அன்பர்பூங் காணியே
உயர்ஞான சிவகா மியே
முத்திக்கு வித்தான முதல்வியே யுனதரிய
முகவிலா சத்தி னேடே
முத்துரத் தினக்கற்கள் தொத்திவைத் திடுதேரிற்
முகமலர்ந் தேறி வருவாய்
இத்தலத் துற்றநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம ஞேனமணி யம்மையே.

4. அணியாட நூறுநா ருயிரங் நரர்கூட
அமரரத் தனைவர் நாட
அத்தர்பரி சுத்தர்சிவ பக்தர்மன மொத்துநின்
றனுதினங் கிருபை தேட
மணியாட மதுரதேன் மலராட ஆடாத
மஞ்சுவான் முகடு மாட
மத்தளத் தாளகைத் தாளமெக் காளமொடு
மங்கையர்கள் நடன மாட
பிணியோட பேய்பில்லி பிறகோட நாஞ்செய்த
பிழைகள்பின் வாங்கி யோடப்
பிரகாச முற்றதே ரரியாச னம்மீது
பேரின்ப மீய வருவாய்
இனிதோ டிலங்குநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம ஞேன்மணி யம்மையே.

5 பாராளு தற்கல்ல ஊராளு தற்கல்லப்
பவுசுபெறு தற்கு மல்லப்
படையாளு தற்கல்லக் குடையாளு தற்கல்லப்
பதவிபெறு தற்கு மல்லத்
தேராளு தற்கல்லக் காராளு தற்கல்லத்
திறைசிறைக ளாள வல்லத்
திக்காளு கின்றவெழு திரையாழி சுற்றியே
திரவியந் தேட வல்லத்
தாராள மாயுன்னை யென்னெஞ்சில் வைத்தாளத்
தாரணியி லேபி றந்தேன்
தயவாக இவ்வுதவி தட்டாம லேசெய்து
தமியேனை யாளு வாயே
ஏராளு கின்றநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம னோன்மணி யம்மையே.

6. பாரிலே பட்டாடை தங்கநகை யோடுதேன்
பாலுமுக் கனிகள் வேண்டாம்
பல்லக்கு சிவிகைதண் டிகைபட்டு மேலாப்பு
பற்றுகுடை கொடிகள் வேண்டாம்
ஊரிலே கீர்த்திக ளிக்கவேண் டாஞ்செல்வ
ஊதியந் தரவே வேண்டாம்
உற்றபெற் றோர்மனைவி மக்களொடு உறவோர்க
ளொன்றுவேண் டாமெனக்கே
நேரிலே தரிசனந் தருதல் வேண்டுந் தந்து
நித்தியந் தாங்க வேண்டும்
நின்னுருவ மென்னுவி போம்போது மென்முனில்
நிற்கவே வேண்டும் அம்மா
ஏரிலே யுயர்வுநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம னோன்மணி யம்மையே.

7. அண்டபகி ரண்டமீ யரியதோ ராசிநீ
அன்புமிகு மன்னே நீயே
அருமையோ டுடன்பிறந் திட்டசோ தரிமிக்க
அத்திபரி சுத்தி நீயே
கண்கண்ட கடவுள்நீ ககனம்நீ புவனம்நீ
காணாத காற்று நீயே
கற்பனைக் கெட்டாத அற்புதப் பொருளான
கைலையங் கிரியும் நீயே
தண்கொண்ட உன்னுருவ மெங்குமே தோணிடத்
தனையோர் தயங்க லேனோ
தாயே! தவத்தியே! தருமக் கரத்தியே!
தாசரைப் பாரு மம்மா
எண்கொண்டி லங்குநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம ஞேன்மணி யம்மையே.

8. கத்தாழி உலகெலாங் கட்டியே யாண்டென்ன
ககனங்கள் சுற்றி யென்னக்
கதிப்பா யிருந்தென்ன மதிப்பாயிருந் தென்ன
கம்பனுய்க் தோன்றி யென்ன
சித்தாதி சித்துக்கள் கற்றென்ன பெற்றென்ன
சிறைகுடிமை வைத்து மென்ன
சிங்கார மாய்ச்சிவிகை பல்லக்கி லேறிபல
சீர்மையே சுற்றி யென்ன
இத்தாதி யாவுநீர் எழுங்குமிழி என்றெண்ணி
இன்றுன்னை நாடி வந்தேன்
ஏழைக் கிரங்கியே யிருவிழிக் கருணையினை
இதுவேளை காட்டு மம்மா
எத்தாலம் போற்றுநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம ஞேன்மணி யம்மையே.

9. துன்பமே தாங்கிடா தழுதழுது உன்னையே
துணையென்று நம்பி வந்தேன்
துட்டனென் றென்னைநீ தட்டிக் கழிக்காது
தூயபொற் பாத மிட்டே
அன்புமுக மனுதினங் காட்டல்வேண் டுங்காட்டி
அரவணைத் தாளல் வேண்டும்
ஆவிபிரி யும்போது மெனைவிட்டு அகலாது
அருகிலே நிற்றல் வேண்டும்
என்புதோ லுள்ளளவு முனைவிட்டு விலகிடேன்
இரவுபக லாய்த்து திப்பேன்
என்றுமே காவடி யெடுத்துநின் றுடுவேன்
இதுவன்மை உண்மை யபமா
இன்பமே யுற்றநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம னென்மணி யம்மையே.

10. ஊருக்கு முதவாத பாவிதா னொருபோது
முண்மை பேசாத பாவி
ஒருநாளு மென்கிலு முனதுதிரு வடிசென்று
ஓதியறி யாத பாவி
ஆருக்கு மஞ்சாத பாவிகன் னியர்கற்ப்
பழித்துக் கெடுத்த பாவி
அநியாய வட்டிவாங் கியபாவி ஒருகவளம்
அன்னங் கொடாத பாவி
பாருக்குள் ளேகொடிய பாவியா மக்கொடுமை
பகரமுடி யாது அம்மா
பாவியா னுலும்நா னுன்பிள்ளை யல்லவோ
பட்ச மேவைத் தாளு வாய்
ஏருக்கு உயர்வுநா ரந்தனை வடக்கினி
லெழுந்துபண் டார புலமே
இரைகின்ற திரைசிந்து கரைவந்து குடிகொண்ட
எம்ம னென்மணி யம்மையே.

### சக்தித தலங்கள்

சீரார் மதுரைகுற் றாலஞ் சிதம்பரஞ்
சீகாளி தென் காசியும்
செப்புரா மேஸ்வரங் கன்னிகா குமரியும்
செந்தூர் திருப் பாண்டியும்
பேரார் விருதுநகர் கம்பநா யம்நெல்லை
பேப்பறச் சிக்கோட்டயம்
பிறையார் களக்காடு முப்பந்தரஞ் சமைய
புரமோடு தேவ கோட்டை
நேரா ரரங்கனூர் தஞ்சையூர் பூதுலூர்
நிறைகாரை யூர் வள்ளியூர்
நித்திலத் தீவிலுறு நயினையூர் கூடலூர்
நெடுங்குறிஞ் சாகுழியி னூர்
ஊரார் பெருங்குளத் தூர்நாரந் தனையூரு
முற்றெழுந் திட்ட சக்தி
ஓம்சக்தி யாம்சதா சிவமனோன் மணிசக்தி
யுறைந்துவாழ் தலங்க ளிவையே.

## நெஞ்சொடு புலம்பல்

### எண்சீர் விருத்தம்

பச்சைநிறக் கிளியினங்கள் பாக்கள் பாடப்
பசுந்தோகை மயிற்கூட்டம் நடன மாட
நச்சரவம் நாகமணிப் படத்தி னோடே
நகர்ந்தாட நளினயிளந் தென்றல் கூட
மச்சமுறுங் கடலலையு மிரைந்து மோத
மக்களது உளங்களிலே மகிழ்வு காண
இச்சையுடன் வடநாரந் தனையூர் வந்த
எழில்மனோன் மணியாளை மறவா நெஞ்சே.

பனித்துளிகள் படிந்தபசுந் தரையும் வற்றாப்
பால்வடியும் பசுநிரையும் பரந்து நிற்கும்
இனித்தநறுங் கனியளிக்குந் தோப்புஞ் செந்நெல்
எழில்வயலுங் கழிநிலமு மெல்லோர் பாலும்

தனித்தபெரு மன்புருகும் சைவர் வாழுந்
தாயகமுந் தனதுதிருத் தலமாய்க் கொண்டு
அனைத்துமுள வடநாரந் தனையூர் வந்த
அன்னைமனோன் மணியாளை மறவா நெஞ்சே.

நாடிருக்க நகரிருக்க நாலா திக்கும்
நறுவனத்தி னோடுபா லாறு நீந்தும்
வீடிருக்க விண்ணவர்கோன் வீற்றிருக்கும்
வெள்ளிமலை தானிருக்க விருப்பில் லாது
காடிருக்குங் கட லிருக்குங் கரிய பாராங்
கல்லிருக்குங் கரைநாடிக் களிப்புக் கொண்டெம்
மோடிருக்க வடநாரந் தனையூர் வந்த
உயர்மனோன் மணியாளை மறவா நெஞ்சே.

பெற்றவளாய்ப் பிறவியுமாய்ப் பேசொண் ணாத
பெரியவளா யுரியவளாய் உலகோர்க் கெல்லாம்
நற்றவளாய் உற்றவளாய் நமது நாட்டின்
நாயகியாய் ராசகியாய் நாஞ்செய் பாவக்
குற்றமெலாம் பொறுப்பவளாய் வரங்க ளெல்லாம்
குறைவில்லா தளிப்பவளாய்க் குணக்குன் றுளாய்ப்
பற்றுதலாய் வடநாரந் தனையூர் வந்த
பசுர்மனோன் மணியாளை மறவா நெஞ்சே.

மாறாத மனக்கவலை பிணிரோ கங்கள்
மறவாத இனப்பகைகள் மரணங் காட்டும்
ஆறாத கன்மங்கள் அதிக நாளாய்
அடங்காத பேய்பில்லி அனைத்தை யெல்லாம்
நீறாக்கி யெம்மையுநந் நிலையி லாக்கி
நித்தியமும் நிறைவாக்கி வைக்க வெண்ணிப்
பேறாக வடநாரந் தனையூர் வந்த
பெருமைசேர் மனோன்மணியை மறவா நெஞ்சே.

கற்கண்டு சர்க்கரைபால் தேன்பூ சூடம்
கனிக்கறு பழவகைசந் தனந்தேங் காய்நீர்
சொறபுகழ்மிக் கருணகிரி நாதன் தந்த
சுவையூறு திருப்புகழ்தான் சாத்திப் பாட

அற்புதங்க ளனுதினமு மடியார் கொள்ள
அனுக்கிரகித் தம்பலம்விட் டகிலம் மீது
கற்பதியாம் வடகாரந் தனையூர் வந்த
நாயகியாம் மனோன்மணியை மறவா நெஞ்சே.

என்னரிய மகனேகண் மணியே யென்றே
இருவாயும் பொன்சொரிய அழைத்தே நின்று
தன்னரிய மடியிருத்திச் சுகதுக் கங்கள்
தாய்க்குரிய அன்பினொடு வினவிக் கேட்டுப்
பன்னரிய அருட்கொடைகள் பங்கு பங்காய்ப்
பகிர்ந்தளிக்க உவந்துமனங் கொண்டே யின்று
நன்னரிய வடகாரந் தனையூர் வந்த
நாயகியாம் மனோன்மணியை மறவா நெஞ்சே.

அயலிருந்து பகலிரவாய் விழித்து நின்றுன்
அடியார்கள் படுந்துயர மனைத்தை யெல்லாம்
கயல்விழியால் பார்த்துமன மிரக்கங் கொண்டே
கைநிறைய வெகுமானம் கருத்தா யீந்தும்
நயசுகங்கள் நாளாந்தங் கேட்டுக் கேட்டும்
நம்மவர்க்கு நல்லருளைப் பொழிய வென்றும்
வயமிருந்த வடகாரந் தனையூர் வந்த
வல்லமனோன் மணியாளை மறவா நெஞ்சே.

வெம்பிணிகள் போக்கிடுவாய் போக்கா விட்டால்
வெய்யோன்தான் வீழ்ந்திடினும் விலகோ மென்று
நம்பியுனைத் தொழுமடியர் நாளும் வேண்டும்
நல்லருளைத் தான்சேர்க்கும் நங்கை யேயென்
அம்பிகையே! தாயே! வா அருள்தா வென்று
அன்புமிக என்புருக அடியார் போற்றச்
சம்புவளர் வடகாரந் தனையூர் வந்த
சக்திமனோன் மணியாளை மறவா நெஞ்சே.

---

# கும்மி

1. கும்மியடியுங்கள் கும்மியடியுங்கள்
கூடிக் கும்மி யடியுங்கடி
நம்மையாள வந்த தான்தோன்றி யம்மாளை
நாடிக் கும்மி யடியுங்கடி

2. வட்ட வரிசையாய் வாருங்கடி — சைவ
வாலப் பெண்களொன்று சேருங்கடி
அட்டதிக் கும்புகழ் அம்மையின் பாதத்தை
அண்டியே கும்மி யடியுங்கடி — கும்மி

3. சோடு சோடாகவே நில்லுங்கடி — உங்கள்
சோபன வாழ்த்துக்கள் சொல்லுங்கடி
ஆடும நடராஜன் அப்பனைப் போல் நட
மாடியே கும்மி அடியுங்கடி — கும்மி

4. தாளங்கைத் தாளங்கள் போடுங்கடி — எங்கள்
தாயை வட்டமிட்டு ஆடுங்கடி
ஞாலமுழுதுங் கேட்டு மகிழ்ந்திட
நன்றாகக் கும்மியடியுங்கடி — கும்மி

5. வாசனைப் பூமாலை சாற்றுங்கடி — மணம்
வற்றாத பன்னீரை ஊற்றுங்கடி
வீசும் வெண்சாமரை கொண்டு பக்கம் நின்று
வீசியே கும்மியடியுங்கடி — கும்மி

6 வட்டக் குடைகள் பிடியுங்கடி — தமிழ்ப்
பாவாலே பாக்கள் படியுங்கடி
எட்டுத் திக்குமாளும் எங்களின் தாயாரை
இறைஞ்சிக் கும்மி யடியுங்கடி — கும்மி

7. ஆலாத்தி ஏந்தி எடுங்களடி — உங்கள்
அன்பை அவள் மேல் கொட்டுங்களடி
காலாதி காலமட் டாயவ ளன்பினைக்
கையேந்தக் கும்மி யடியுங்கடி — கும்மி

8. வல்லாரி பைம்பைக ளூதுங்கடி — மன
வாட்டத்தை அம்மாளுக் கோதுங்கடி
எல்லோரு மொன்றாக வட்டமிட்டுக் கூடி
இன்பமாய்க் கும்மி யடியுங்கடி — கும்மி

9. வத்திகள் கற்பூரங் காட்டுங்கடி — அருள்
வாங்கிடச் செங்கரம் நீட்டுங்கடி
பத்தி யுடனொரு மிகது வணங்கியே
பாடியே கும்மி யடியுங்கடி — கும்மி

10. வேண்டும் வரங்கேட்டுக் கூடுங்கடி — எங்கள்
விண்ணரசி பாதம் நாடுங்கடி
மாண்டாலும் பேரின்ப வாழ்வு தழைத்திட
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி — கும்மி

## திருப்புகழ்

அருளி னொளியு மருளு விழியு
அமிர்த மொழியு — முடையாளே
அரனி னருகி லமரு மரிய
அமரர் பணியும் — அனையாளே
பொருளு முருமும் பணமுஞ் சுகமும்
பொடியென் றதனை — உணராமல்
பொழுது மிரவு முழுது மதனில்
புலனை மிகவுங் — கழித்தேனே
இருளி னடுவி னெழுமின் னுடுபோல்
இடமிங் கெழுந்த — மணியாளே
எழிய மதலை பகரு குதலை
மொழியை யினிது — செவிகேளாய்
கிருபை பெருகு முருக குழவி
கிழவி யறிவு — தருவாயே
கவலை கழிய வினைக ளழியக்
கருணை தருவாய் — உமையாளே

---

## கீர்த்தனைகள்

(ஆனந்த நடமிடு எ. மெ)

### பல்லவி

ஆனந்த நடன சிங்காரி அன்பர்க்கருள் மாரி
அனைவர்க் குபகாரி — ஆனந்த

### அனுபல்லவி

ஞானம் விளங்கப் பரமானந் துலங்கத் தேவ
கானம் படித்துச் சிவ ஞானத்துடனின்றாடும் — ஆனந்த

### சரணம்

மெத்த மகத்துவ நற்குணசீலி
மேதினிக்குப் பெருமற்புதலீலி
சக்தி மெத்தவுள்ள சர்வனு கூலி
சதாசிவன்பர்களின் பரிபாலி
தத்திரிகிட திமிஸனுத ஸனுத தீம் தக
ததீங்கின தோம் ஸன ஸன ஸ்ன வென
அண்டலர் மண்டலர் எண்டிசையோர்களும்
அடிநாடிட துதிபாடிட மிடிஓடிட — ஆனந்த

ஈரேழுலகமும் ஏற்றும் பிரகாசி
இந்திராதிகட்கும் விசுவாசி
பாரோர்க்கிது தினந்தா வுனதாசி
பக்தர் போற்றுஞ் சதாசிவ நேசி
தத்திரிகிட திமிஸனுத ஸ்னுத ததீம் தக
ததீங்கின தோம் ஸன ஸன ஸ்ன வென
அண்டலர் மண்டலர் எண்டிசை யோர்களும்
அடிநாடிட துதிபாடிட மிடிஓடிட — ஆனந்த

(தாமரை பூத்த எ. மெ.)

பல்லவி

நாரந்தனை நகர் நாடுமடா
நம் மனோன் மணிவாழும் நாடதடா — வட

அனுபல்லவி

வாரந்தோறுங் கருணை வழியுதடா — அங்கு
வான் மழை போல நள்கள் பொழியுதடா — வட

சரணம்

நேரந் தவறுப் பூஜை நிகழுதடா
நெஞ்ச மெல்லாந் தாயைப் புகழுதடா
கோரப் பிணிகள் பஞ்சங் குறையுதடா — தாயின்
குளிர்முகங் காண நெஞ்சம் நிறையுதடா — வட

அஞ்சுகங்கள் அம்மையைப் பாடுதடா
அடிவணங்கி மயில்கள் ஆடுதடா
கொஞ்சும் முகத்தில் தென்றல வீசுதடா — தாயின்
குங்கும வாய் கதைகள் பேசுதடா — வட

---

## அடியார்கள் வீட்டிலிருந்து புறப்பட்டு, அம்பாளின் திருமுகங்கண்டு ஆகுலங்கூறி அருள்பெறுவதை எடுத்துக் காட்டும்

## மனோன்மணி அம்மாள் வண்ணம்

திருவளர் ஞானந் திகழு தியானம்
திக்கு மகிழ்ந்து சிறந்து விளங்கும்
வருதிரு நாரந் தலைவட பாகம்
வந்து விளங்கு மனோன்மணி பாதம்

கருதியே நாடக் கருணைகள் தேடக்
கவலைகள் யாவும் கனவழி யோடக்
கடுபிணி பஞ்சங் கொடுமன வஞ்சம்
கண்டதும் நின்றது கெஞ்சியே வாட

ஒருமன தோடு உயர்நினை வோடு
உத்தம சேயரும் பத்தினி யோடு
உடனே யெழுந்து உடைக ளணிந்து
உற்றவெண் ணீறையும் நெற்றி யணிந்து

புதுயிள வாழைத் தலையிலை மீது
பொங்கலு முக்கனி மிக்க படைத்து
புழுகுட னோடித் தெருவினி லாடும்
புத்திர ரைத்தலம் விட்டு நடத்தி

அயலவர் நாடத் துணையவர் கூட
அகமகிழ் வோடரும் அரகரா கூற
அணியணி யாக முரசொலி பாட
அடியவ ரனைவரும் அருள்பல தேட

அலைகடல் மோதும் குயில்மொழி பேசும்
அம்புலி தண்கதிர் நின்றொளிர் வீசும்
அதிசய மான தலமென ஓதும்
அம்மை மனோன்மணி தங்கியே வாழும்
அற்புத மான தலம் நாடுமே.

வருமதி போல முகவொளி வீச
வண்டமி ழின்கலை நாகுயில் பேச
வரிவுறு கொவ்வைப் பழமென கூற
வாயிதழ் மீதுமுத் தமிழ்மொழி யூற

கருணை விளங்க விழிகள் துலங்கக்
கங்கைபோ லூறிரு கொங்கை விளங்க
கமுகென ஓதும் முதுகிடை யோடு
கங்கணந் தங்கிடும் கரங்க ளிலங்க

அழகழ கான பலநிற வாடை
அங்கம தெங்குமே தொங்கி விளங்க
அணியணி யாகப் புதுமுறை யான
ஆயிர மாபர ணதிகள் தொங்க

விருது பிடிக்க முரச மடிக்க
விண்ணதி ரப்பல ஒலிகள் இசைக்க
விதவித மான பலபல ராகம்
வித்துவர் மெத்தவே ஓத்துப் படிக்க

ஆகம வேதம் யாவு முணர்ந்த
அந்தணர் மந்திரம் ஓதி வணங்க
அகிலமீ துள்ள சகல உயிர்க்கும்
அத்தனை சாதியின் மதத்தவர் கட்கும்

உணவு அளிக்கும் உயர்வு அளிக்கும்
உற்றிடு நன்மைகள் யாவு மளிக்கும்
உத்தமி யான சத்திய ஞான
ஒப்பரும் எம்மவர் அம்மைய ரான
உயர் மனோன் மணியாளைப் போற்றுமே.

உருகியே போற்று உளமது காட்டு
உயர்புது நறுமலர் திருவடி சாற்று
உதிர்உதிர் கண்ணீர் விழவிழ நின்று
உடனடி புதுமைகள் பொழியென விள்ளு

அழுகை விடாது அடிபிச காது
அல்லல்கள் சொல்லுவ தணுவும் விடாது
அகமகிழ் வோடு அறநிலை யோடு
அகிமிகு தயைகுண அமைதியி னோடு

மனதை யடக்கி மலர்க ளெடுக்கி
மண்டல வாசைகள் யாவும் விலக்கி
மனைவியி னோடு மகவுக ளோடு
மாண்புறு மன்னைபி தாவரு கோடு

அருகது சென்று அவளடி நின்று
அருளது ஒழுகிடு திருவிழி கண்டு
அகிலமே செய்த பவவினை யாவும்
அற்பம் விடாதொரு மித்தே புகன்று

சிரமது மேலே இருகர மேற்றி
சென்னியும் மெய்யுமே உன்னி வளைத்து
உருகிநின் றோடும் இருவிழி நீரால்
உற்றபட் டாடைகள் முற்றும் நனைத்து

வேதனை கூறி வீழ்ந்துமன் ருடி
வெம்பிய மனமதி லாறுதல் தேறி
வெளிவெளி யாக முறைமுறை யாக
விண்ணர சாளிடம் விபரமா யோதி
வேண்டுதல் கேட்டு மன்ருடு வீர்.

ஒருமன தோடு சிறுவர்கள் போல
உருகிய பெருகிய திருவிழி யோடு
உகமது வேண்டும் சுகமது யாவும்
உமையவ ளிடமது சமயமே கேளும்

அவளிரு பாதம் ஒருபொழு தேனும்
அகலவி டாமலே தொழுதிடில் ஞாலம்
உடனடி யாகத் திருவிளை யாடி
உதவிக ளருளுவாள் பலபல கோடி

கருணை யளிப்பாள் கவலை ஒழிப்பாள்
கருதிய வரமது நொடியி லளிப்பாள்
கருமுகி லூறும் மழையது போல
மணமிது வேளையி லருளே யளிப்பாள்

வறுமை ஒழிப்பாள் சிறுமை ஒழிப்பாள்
வன்மன அலகையின் வலிமை ஒழிப்பாள்
வரிசை யளிப்பாள் வடிவ மளிப்பாள்
வாரியே திரவியம் கோரி யளிப்பாள்

சுகமு மளிப்பாள் பலமு மளிப்பாள்
சூதுகள் வாதுகள் யாவு மொழிப்பாள்
இகபர நன்மை சகலது மொன்ருய்
எழில்முக மோடவ ளினிது யளிப்பாள்.
எழில்முக மோடவ ளினிது யளிப்பாள்

ஆதலி ஞலே அடியரே வாரும்
அன்புடன் பண்டாரி புலமது சேரும்
அவரவர் குற்றங் குறைகளை ஓதும்
அம்மணி யாளிடம் சலுகைகள் கேளும்
கேட்டு நீடூழியே வாழுமே.

## கண்ணிகள்

1. ஆடாடு மயிலேகூத் தாடாடு மயிலே
ஆனந்த நடனமொடு ஆடாடு மயிலே
ஆடாடு மயிலேகூத் தாடாடு மயிலே
அம்பாள் மனோன்மணிமுன் ஆடாடு மயிலே.

2. கண்கண்ட தெய்வமென் றாடாடு மயிலே
கையெடுத்தே தொழுது ஆடாடு மயிலே
தண்கொண்ட தாளடி நின்றா டாடு மயிலே
தலைதாழ்த்தித் தாழ்த்தநின் றாடாடு மயிலே

3. தோத்திரத தோடுநின் றாடாடு மயிலே
தோகையெல் லாம்விரித் தாடாடு மயிலே
காத்திரத் தோடுகூத் தாடாடு மயிலே
கலையெல லாஞ்சொல்லி ஆடாடு மயிலே

4. இருள்ஓட்டு ஓட்டென்று ஆடாடு மயிலே
இடர்வாட்டு வாட்டென்று ஆடாடு மயிலே
அருள் காட்டு காட்டென்று ஆடாடு மயிலே
அறம்நாட்டு நாட்டென்று ஆடாடு மயிலே.

5. புதுமலர்கள் சாற்றிநறு நெய்த்தீப மேற்றிப்
போற்றிசெய் வோமென்று ஆடாடு மயிலே
மதுரமுறு சர்க்கரையு முக்கனியு மிட்டு
மலரடி துதிப்போமென் றாடாடு மயிலே

6. சந்தானம் பெருகவென் றாடாடு மயிலே
சம்பத்து தருகவென்றாடாடு மயிலே
நொந்தான வெம்பிணிகள் நோக்காடு யாவும்
நொடியினில் கருகவென் றாடாடு மயிலே

7 பகைவன்மம் விட்டோமென் றாடாடு மயிலே
பட்சமுற் றோமென்று ஆடாடு மயிலே
நகைமுகத் தோடேந்த நாளுந்த னடியில்
நாடிவரு வோமென்று ஆடாடு மயிலே

## கண்ணிகள்

1. காவலூர் நாரந்தனை வட பாகமோர்
காட்சிவிளங்கு தடா — அங்கு
பாவ விமோசனம் பண்ணும் மனோன்மணி
ஆட்சி இலங்குதடா.

2. பச்சைக் கிளியினம் இச்சையுடன் தாயைப்
பாடிப் புகழுதடா — மயில்
அச்சமில் லாமலே அம்பாளின் செம்பதம்
ஆடி மகிழுதடா

3. கூடுங் குயிலினங் கூவிசகூவித் தாயைக்
கும்பிட்டுப் பாடுதடா — விளை
யாடும பசுக்கன்றும் பால்மறந் தம்மையை
அன்புடன் நாடுதடா

4. கத்துங் கடலலை வந்துவந்து தாயின்
காலை தழுவுதடா — சுவை
மெத்த வுள்ள கிணறாற்றுநீர் தாயாரின்
மேனி கழுவுதடா

5. வீசிடுந் தென்றல் தவழ்ந்து தாயாரின்
வியர்வை துடைக்குதடா — இரு
நாசிவிரும்பிடும் பூசித கற்பூர
வாசங்கிடைக்குதடா

. காசி கதிர்காமம் நல்லூர் நயினையின்
காட்சி தெரியுதடா — விசு
வாசிகள் அம்மையைப் பூசித்த அம்மனம்
பொங்கிவிரியுதடா

7. அம்மையம்மை யென்று கூச்ச லிடுஞ்சத்தம்
ஆயிரங் கேட்குதடா — நூறு
ஆயிரம் பேருக்கும் அம்பாள் திருவிழி
அங்கங்கு நோக்குதடா

## கண்ணிகள்

1. நாரந்தனை நாடி வந்த அம்மையாரே — உந்தன்
நல்லருளைத் தேடிவந்தோம் அம்மையாரே
ஆரஞ் சூடிப் போற்று கின்றோம் அம்மையாரே
— எம்மேல்
ஆதரவு காட்ட வேண்டும் அம்மையாரே

2. நீலக் கடலோரம்வந்த அம்மையாரே — உந்தன்
நெஞ்சமுகங் காட்டவேண்டும் அம்மையாரே
ஆலமுண்ட அப்பனோடு அம்மையாரே —எம்மை
அன்பு வைக்கச் செய்ய வேண்டும் அம்மையாரே

3. பண்டாரி புலமுதித்த அம்மையாரே — நேசப்
பாலர்முகம் பார்க்க வேண்டும் அம்மையாரே
கொண்டாடுமுன் பக்தர்க்கெல்லாம் அம்மையாரே அருள்
கோடிகோடி ஈய வேண்டும் அம்மையாரே

4. கல் லினுள்ளே தோன் றிவந்த அம்மையாரே — உந்தன்
கருணைவிழி காட்டவேண்டும் அம்மையாரே
தொல்லுலகில் உன்னருளால் அம்மையாரே — பாவ
தோஷமெல்லாம் போக்க வேண்டும் அம்மையாரே

5. தான்தோன் றியாய் வந்துதித்த அம்மையாரே — உந்தன்
தாயின்அன்பைக் காட்டவேண்டும் அம்மையாரே
ஊன்தோன் றிடு மெம்மவர்க்கு அம்மையாரே — நீவிர்
உற்றதுணை யாகவேண்டும் அம்மையாரே

6- முந்தையோரின் ஈஸ்வரியாய் அம்மையாரே — இங்கு
முந்திவந்து ஆட்சி செய்தீர் அம்மையாரே
இந்தநாளும் வந்துதித்தீர் அம்மையாரே — நீவிர்
என்றுமெம்மை யாள வேண்டும் அம்மையரே

7. ஆதிகால மக்களுக்கு அம்மையாரே — நீவிர்
அள்ளியருள் பெய்தவண்ணம் அம்மையாரே
ஓதுமடி யார்தமக்கும் அம்மையாரே — அருள்
ஊற்றுக்கண் திறக்கவேண்டும் அம்மையாரே

## கண்ணிகள்

1. தான்தோன்றி யாகவந்த — மனோன்மணித்
தாயே தயைக் கடலே
ஊனதோன் றிடு மெமக்கு — நல்லதொடு
உத்தாரந் தாருமம்மா

2. நாடு நகரிருக்க — நாரந்தனை
நாடியே வந்தவளே
கேடு களைந்திடம்மா — நல்லபெருங்
கீர்த்திகள் தந்திடம்மா

3. மாடகூட மிருக்க — கல்லுக்குள்
மறைந்து இருந்தவளே
வாடவிடா தெம்மையே — உன்னருளை
வற்ருமல் தந்திடம்மா

4. ஆறுநதி யிருக்க — கடற்கரை
அண்டி யெழுந்தவளே
வேறுமுகங் காட்டா — தெமக்குநற்
பேறுகள் தந்திடம்மா

5. கந்தவன மிருக்கக் — கட்டாந்தரை
கண்டு மகிழ்ந்தவளே
மைந்தர்முகம் பாரம்மா — நொந்துவரும்
மாவினை தீருமம்மா

6. சற்சனரே மதிக்க — பிறமத
சாட்சி யெடுத்தவளே
அற்பர் குறைபொறம்மா — பொறுத்தென்றும்
அற்புதங் காட்டுமம்மா

7. வெள்ளிமலை யிருக்க — புற்றரை
விரும்பி யுதித்தவளே
கிள்ளி விடாமலருள் — அனுதினம்
அள்ளி யிறைத்திடம்மா

# அம்மானை

## நாட்டுச் சிறப்பு

சீர்செறியும் யாழ்நகரின் செஞ்சிரம்போ லேவிளங்கும்
ஏர்செறியு மூர்காவற் றுறையென்னுந் தொன்னகரில்

நாரந்தனையென்னும் நாமந் தரித் திலங்கும்
ஆரங்கள் சூழும் அழகான நன்னாடாம்

இந்நாட் டியற்சிறப்பை இறவாத் தமிழ்மொழியில்
பந்நாட றிந்திடவே பகருவேன் கேட்டருளும்

செந்நெல் வயல்நிரையும் சிங்காரத் தோப்புகளும்
கன்னல் நிறைநிலமும் கவினரிய சோலைகளும

காணி களனிகளும் கமக்காரர் ஏர்நிரையும்
கேணி கிணறுகளும் கீழூற்றுக் கூவல்களும்

கத்துங் கடற்கரையும் கரையில்நன் னீரூற்றும்
மெத்த அழகுடைய மேச்சலுள்ள புற்றரையும்

இறவாத் தமிழ்க்கலையை இருவிழிபோ லேகாக்கும்
மறவாத அன்புடைய மறத்தமிழர் வாழ்மனையும்

இந்துமத வொழுக்கம் எள்ளளவு மேபிசகா
சந்ததியில் வாழ்ந்துதித்த சன்மார்க்கர் சூழ்பதியும்

கொண்டு விளங்கிவருங் கோதில்லா தின்னாட்டில்
இன்று துதித்துவரும் எழில்மனோன் னம்மாளும்

வந்துதித்த காதை வரிசையாக் கூறிடுவேன்
தொந்திக் கணபதியைத் துதிசெய்து கேட்டருளும்

## ஆரம்பம்

நாரந்தனை வடக்கில் நல்ல சைவர் வாழ்ந்திடினும்
வாரந்தோறு மடியார் வணக்கம் புரிவதற்கும்

மணியோசை கேட்பதற்கும் மனக்கவலை தீர்ப்பதற்கும்
பிணிதுன்பம் போக்குதற்கும் பிழைகள்பொறுப்பதற்கும்

கற்பூரங் காட்டுதற்கும் காவடி யெடுப்பதற்கும்
அற்புதங்கள் தாவென்று அழுதழுது கேட்பதற்கும்

காலையிலும் மாலையிலுங் கையேந்தி நிற்பதற்கும்
வேலையில்லா வேளையிலும் வேதனையைக் கூறுதற்கும்

மக்கள் மனைவியொடும் மாதா பிதாவினொடும்
அக்களிப்பாய்ச் சென்று அடிதொழுது வேண்டுதற்கும்

பாலுங் கனிதேனும் பாகோடு சர்க்கரையும்
நாளும் படைத்துநின்று நாளாந்தம் போற்றுதற்கும்

இந்துக்கள் கோவிலொன்று இப்பதியில் லாததினால்
எந்த அழகிருந்தும் இந்தஎழில் நாட்டினிற்கோர்

பெரிய குறையாச்சுப் பேசவோர் கதையாச்சு
உரிய வடுவாச்சு உயர்வெல்லா மேபோச்சு

இந்தக்குறை போக்குதற்கு எவர்மனமும் நாடவில்லை
வந்தகுறை போக்குதற்கு வகையுள்ளோர் நாடவில்லை

ஆதலா லிக்குறையை அடியோ டகற்றிவிட
ஓதும் மனோன்மணியாள் உளமதனி லேநினைத்து

தங்கச் சிலைவடிவாய் தாந்தோன்றி யாகவந்து
எங்கள்திரு நாட்டில் எழுந்திட்டாள் மானிடரே

இந்தத் திருக்கதையை இனிய தமிழ்நடையில்
வந்தித்துச் சொல்வேன் வணக்கமுடன் கேட்டருளும்

## பண்டாரி புலம்

நாடு நகரிருக்க நாற்புறமும் வாசலுள்ள
வீடும் விருந்தைகளும் விதம்விதம தாயிருக்க

மாடங்கள் உப்பரிகை மாளிகையும் தானிருக்க
கூடங்கள் கோபுரங்கள் கோடிகோடி யாயிருக்க

தேன்சுனையும் வாவிகளும் திக்கு நிறைந்திருக்க
மானும் மரையு லாவும் மலர்வனங்கள் மிக்கிருக்க

மலைகளுங் குன்றுகளும் மலிந்து பொலிந்திருக்க
தலைநகர மெல்லாந் தனியாத் தவித்திருக்க

கடலுங் கடற்கரையுங் கல்லுங்கட் டாந்தரையும்
திடலுங் கழிநிலமும் திருமனதி லேவிரும்பி

மண்டாரி யார்புலத்தில் பாராங்கல் லுக்கடியில்
கொண்டாடி நின்றே கும்பிட்டுப் போற்றிடவே

தங்கச் சிலைவடிவாய்த் தான்தோன்றி அம்மாளாய்
எங்கள் குறைநீக்க எழுந்து வந்தாள் அம்மானை

அம்மா ளுதித்தகதை அடியேனுன் கூறிடுவேன்
இம்மா னிலத்தோரே இனிதாகக் கேட்டிடுவீர்.

## கல்லுடைப்போர் கண்ட காட்சி

நாரந்தனை வாழுகின்ற நல்லதொழி லாளரெல்லாம்
வீரப் புயத்தினொடு வேண்டுந் தொழில்புரிவார்
தோட்டங்கள் செய்திடுவார் துலாவும் மிதித்திடுவார்
வாட்டமில் லாப்பயிர்கள் வகைவகையாய் வைத்திடுவார்
கைந்தொழிலுஞ் செய்திடுவார் கமங்களுமே பண்ணிடுவார்
எத்தாத்து வேலைகளும் இனிதாக வேமுடிப்பார்

ஏந்தி யிரவாமல் ஏவற்ருெழில் செய்யாமல்
சாந்தி மனத்தோடு சதங்கையுடன் வாழ்ந்திடுவார்

இப்படி யாய்வாழுகின்ற ஏர்மிகுந்த நாடதனில்
தப்பிதமில் லாதிருவர் தங்கள்சீவ னத்திற்காய்

கற்களையே கிண்டுதற்கும் கல்லுடைத்து விற்பதற்கும்
கற்கள் விளைந்திருக்கும் கட்டாந்தரை நாடுதற்கும்

மண்வெட்டி பிக்கான் மடுத்தல் அலவாங்கும்
மின்வெட்டில் கல்லுடைக்கும் மிகுந்த அதிர்வெடியும்

வண்டிதனி லேற்றிவைத்து வலமாக அவ்விருவர்
பண்டாரி யார்புலத்தின் பக்கமது நாடினராம்

அங்கவர்கள் சென்றவுடன் அலவாங்கு பிக்காளுல்
தங்கள்மனப் போக்குடனே தரையெல்லாந் தோண்டினராம்

பலவிடத்தில் பார்த்தும் பார்களில் லாததிளுல்
தலமதனி லேசோர்ந்து தனித்திருக்கும் வேளையிலே

மிகப்பெரிய பாறையொன்று மேலாகத் தோன்றிடவே
அகமகிழ்ச்சி கொண்டு அதைத்தோண்டச் சென்றனராம்

மடுத்தல் அலவாங்கும் மற்றபெரு மாயுதமும்
அடுத்தடுத்துப் போட்டாலும் அதுஉடையக் காணவில்லை

இந்தப் பெருங்கல்லை எப்படியும் நாமுடைத்தால்
வந்ததற்கு நல்லபெரும் வருமானங் கிட்டுமென்று

அதிர்வெடியை வைத்தே அதனை உடைப்பதற்குக்
கெதியாக வேர்குழியைக் கிண்டிவெடி யிட்டனராம்

வெடியிட்டிப் பற்றவைத்து வெளியேறி வந்ததன்பின்
இடிபோல் வெடித்திடவே இருந்தபெரும் பாறையது

சுக்குநூ ருகத் தூள்தூளாய்ப் போய்விடவும்
அக்களிப்புக் கொண்டே அங்கவர்கள் பார்த்திடவே

பாருக் கடித்தளத்தில் பவுன்காசு நாணயமும்
மார்புக் கணிதங்க மாலைகளுந் தூக்கணமும்

இத்தனைக்கும் மேலான எல்லோர்க்குங் கிட்டாத
சொத்துக்குச் சொத்தான சுவர்க்கத்தின் முத்தான

தங்கத்தி னுல்சமைத்த தாயார் மனோன்மணியின்
மங்காத் திருவடிவம் மலர்ந்து கிடந்தனவாம்

இங்கிதனை இவ்விருவர் இருவிழியால் கண்டதுமே
பொங்கி மன மகிழ்ந்து பூரிப்புத் தானடைந்து

சங்கையாய்த் தூக்கிச் சால்வைதனி லேமடித்து
மங்களமாய்த் தங்கள் மனைநாடிச் சென்றனராம்

அங்கவர்ள் சென்ற பின்பு அற்புதத்தைக் கூறியதும்
தங்கது சைவரெல்லாந் தாவியோடிப் பார்த்தனராம்.

## ஆலயம் அமைத்தல்

அம்மாள் திருச்சிலையின் அற்புதத்தின் காதையெல்லாம்
இம்மானில மெங்கும் எட்டிப் பரவிடவே

அரசாங்கக் காதினிலும் அதிசயங்கள் கேள்வியுற
சிரசாங்கம் பண்ணிச் சீக்கரமா யோடிவந்து

கண்டெடுத்த பொற்சிலையைக் கையேந்திப் பெற்றுநின்று
கொண்டேகிச் சென்றனராம் கொழும்பு நகர்நோக்கி

சிலைகண்ட பாரிடத்தில் சிறுகொட்டி லுண்டாக்கி
தலைவணக்கஞ் செய்யத் தாசர் தவித்தனராம்

அங்குள்ள சைவரெலாம் அன்போ டொருமித்தே
தங்களரும் கைப்பொருளால் தாய்க்குத் தலமமைக்க

ஊக்க மெடுத்துநின்று ஒத்தாசை யாகநின்று
வாக்களித்த வண்ணம் வணக்கஞ் செலுத்துதற்கு

ஆயிரத்தொள் ளாயிரத்தி ஆண்டைம்பத் தொன்றினிலே
தூயவை காசிமதி துலங்கிருப தாந்தேதி

சங்கத்தைக்கூட்டி நின்று சற்சனர் வணங்கிடவே
மங்களமா யோர்கொட்டில் மகிழ்வோ டமைத்தனராம்

அன்றமைத்து வைத்தகொட்டில் அம்பாள் திருவருளால்
இன்றுவோ ராலயமாய் இருந்து விளங்கிறதே

என்றென்று மம்மாள் எம்மோ டருகிருந்து
குன்று தருள்பெய்யக் கும்பிட்டுப் போற்றிடுவோம்.

## வாழி விருத்தம்

மாதமெலாம் மும்மாரி பொழிந்து வாழி!
மனமகிழச் செந்நெலெலாம் மலர்ந்து வாழி!
ஆதரையில் சைவமதம் ஆல்போல் வாழி!
அறம்வழியும் மெய்யடியார் அன்பாய் வாழி!
பேதமின்றி மடமாதர் தங்கள் கற்பைப்
பேணியே பேருலகில் பெருகி வாழி!
ஓதுமனோன் மணியாளின் அருளைப் பெற்று
உலகிலே நீடூழி வாழி! வாழி!!

விவேகானந்தா
அச்சகம்
யாழ்ப்பாணம்